


# புது சுடர்

உண்மைக்கே முதலிடம்

02nd APRIL 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 21




நிலைமை எப்படி மாறிவிட்டது பார்த்தீர்களா 04

துப்பாக்கியுடன் காத்திருந்த எஸ்.பி. 06

# விமல்–கம்மன்பிலவுக்கு வலை: மஹிந்த தரப்பு வீச்சு



விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை மீண்டும் வளைத்துப் போடுவதற்கு மஹிந்த ராஜபக்ஸ தரப்பு நடவடிக்கை ஒன்றை திரைமறைவில் மேற்கொண்டிடுப்பதாக மஹிந்த தரப்பு வட்டாரத்தில் இருந்து அறிய முடிகிறது.

எதிர்காலத்தில் எழப்போகும் அரசியல் பிரச்சினைகளின்போது விமல் தரப்பு மஹிந்தவுடன் இருப்பதுதான் ராஜபக்ஸ தரப்புக்கு வெற்றியைக் கொடுக்கும் என்று மஹிந்தவின் சகாக்கள் பலர் கருதுவதால் அவர்களின் யோசனைக்கு அமைய மீண்டும் விமல் தரப்பை மஹிந்தவுடன் இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஐஆகு, 13 ஆம் திருத்தச் சட்டம்,அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துதல் போன்ற பிரச்சினைகள் எதிர்காலத்தில் எழவுள்ளன.அப்போது விமலின் குரல் மஹிந்தவின் பக்கம் இருந்து ஒலிக்க வேண்டும் என்று அவர்கள் மஹிந்தவுக்கு எடுத்துக் 02

## அமைச்சு பதவி கேட்டு நடையாய் நடக்கும் பசில்

புதிய அமைச்சரவை நியமனம் இன்னும் இழுபறியிலேயே உள்ளது.இதோ நியமிக்கிறேன்,அதோ நியமிக்கிறேன் என்று இழுத்தடித்துக்கொண்டே இருக்கிறார் ஜனாதிபதி.

இதனால் தனியாகச் சென்று பல தடவைகள் ஜனாதிபதியை சந்தித்துள்ளார். 02



## சு.கவின் புது இலக்கு: வெற்றியை நோக்கிய பயணம்:

### எல்லோரையும் ஒன்றிணைக்கும் மைத்திரி..

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இந்த நாட்டை நீண்ட காலம் ஆட்சி செய்த மிகப் பெரிய 02






## அரசில் இணையும் 6 எம்பிக்கள்: IMF நிதியால் உண்டான கவர்ச்சி

ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பல எதிர்கட்சிகளில் இருந்து ஆறு எம்பிக்கள் அரசுடன் இணையவுள்ளனர் என்று அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாதம் 4ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது அந்த 6 பேரும் அரச பக்கத்தில் அமர்வர் என்று அந்தத் தகவல் மேலும் தெரிவிக்கிறது.

ஐஆகு நிதி கிடைத்துள்ளதால் அரசுமீது நம்பிக்கை ஏற்பட்டே அவர்கள் அந்தப் பக்கம் செல்கிறார்கள் என்று அறிய முடிகிறது.

ஆனால்,இந்தத் தகவலை மறுத்துள்ளது ஐக்கிய மக்கள் சக்தி.அரசில் இருந்துதான் பலர் எதிர்க்கட்சி வரிசையில் அமரப் போகிறார்கள் என்றும் எமது கட்சியில் இருந்து யாரும் அரசு பக்கம் செல்லமாட்டார்கள் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்ஜித் மதுமபண்டார தெரிவித்துள்ளார்.






புது சுடர்
www.puthusudar.lk
2023 APRIL 02 - SUNDAY

# IMF கவர்ச்சியால்...

மக்கள் பழையவற்றை மின்னல் வேகத்தில் மறப்பதால்தான் காலகாலமாக இந்த அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிற ார்கள்ஏமாற்றி அவர்களின் அரசியல் இருப்பை உறுதி செய்கிறார்கள் கொள்ளையடிக்கிறார்கள்.

இந்த அரசு சரி இல்லை என்றதும் அடுத்த அரசை உருவாக்குகின்றனர். அந்த அரசு சரி இல்லையென்றதும் மீண்டும் அதே அரசை உருவாக்குகின்றனர்.மக்களின் மறதிதான் இதற்குக் காரணம்.

போரை வெற்றிகொண்டார் என்பதற்காக மஹிந்தவை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினார்கள்.அவர் பிழை விடுகிறார் என்று தெரிந்ததும் 2015இல் அவரைத் தோற்கடித்துவிட்டு மைத்திரி-ரணில் அரசைக் கொண்டு வந்தார்கள்.

அந்த ஆட்சியில் பிழை கண்டதும் அதைத் தோற்கடித்துவிட்டு மீண்டும் ராஜபக்ஸ குடும்ப ஆட்சியைக் கொண்டு வந்தனர்.

இப்போது அந்தக் குடும்ப ஆட்சி பிழை என்று தெரிந்ததும் அடுத்த தேர்தலில் அவர்களை கவிழ்ப்பதற்கு காத்திருக கிறார்கள்.

இதுதான் நடக்கிறது அரசியலில். இதன் காரண மாகத்தான் அரசியல் வாதிகள் பயப்புடாமல் தப்பு செய்கிறார்கள். இது மக்களுக்கு மட்டுமல்ல அரசியல் வாதிகளுக்கும் பொருந்தும்.

சில அரசியல்வாதிகள் கவர்ச்சியை நம்பி-பழையதை மறந்து கட்சி தாவல் வேலையை செய்கிறார்கள்.அதுதான் இப்போதும் நடக்கப் போகிறது.

எதிர்க்கட்சியில் இருந்து 6 பேர் அரசு பக்கம் தவுவதற்குத் தயாராக வுள்ளார்கள் என்று அரச தரப்பில் இருந்து தகவல் கிடைத் துள்ளது.

அவர்கள் தாவுவார் களோ, இல்லையோ ஆனால், தாவுவதற்கு அவர்கள் எடுத்துள்ள காரணம் என்ன தெரியுமா?

IMF நிதி கிடைத் தமைதான். இந்த நிதியால் கவரப்பட்டு- இந்த நிதியுடன் நாட்டின் பொருளா தாரம் நிமிர்ந்து விடும் என்று நினைக்கிறார்கள் இவர்கள்.

பட்டாசு சுட்டு மகிழ்ச்சியை வெளியிட்டவர்களும் இவர்களாகத்தான் இருக்க வேண்டும்.இது ஒன்றை மாத்திரம் வைத்துக்கொண்டு எப்படி முடிவு செய்வது? இன்னும் எவ்வளவோ நடக்க இருக்கிறது.

தனியார் மயமாக்கம் உள்ளது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வரவுள்ளது. IMF நிபந்தனைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தும்போது பல விடயங்கள் இடம்பெறவுள்ளன.

இவற்றையெல்லாம் கருத்தில்கொள்ளாமல் ஒரேயொரு காரணத்தை மாத்திரம் வைத்து அரசு செய்வதெல்லாம் சரி.மக்கள் அதை விரும்புவார்கள் என்று எப்படி முடிவு செய்வது?

மக்களின் வாழ்க்கைத் தரம் அப்படியேதான் உள்ளது.எதிர்கட்சி அரசியல்வாதிகள் அவசரப்படும் தருணம் இதுவல்ல.மக்களுடன் இருக்க வேண்டிய தருணம்.மக்கள் எந்தப் பக்கம் நிற்கிறார்களோ அந்தப் பக்கம் நிற்பதே சிறந்தது.

# ஆளுநர்களால் பெரும் தலையிடி: "அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்"

## - ஜனாதிபதியிடம் அரச எம்பிக்கள் முறைப்பாடு..



சில ஆளுநர்களின் செயற்பாடுகள் தொடர்பில் அரச எம்பிக்கள் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.அத்தோடு,முதுகெலும்புள்ள ஒருவரை பொலிஸ்மா அதிபராக நியமிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரச எம்பிக்களின் கூட்டத்திலேயே இவ்வாறு முறைப்பாடு செய்தனர்.

சில மாகாணங்களில் ஆளுநர்களின் செயற்பாடுகள் கடுமையாக இருப்பதாகவும் பெரும் தலையிடியாக அமைந்திருப்பதாகவும் எம்பிக்கள் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்தனர்.

மேலும் பொலிஸ்மா அதிபர் மற்றும் சவேந்திர சில்வா ஆகியோருக்கு எதிராகவும் முறைப்பாடுகள் செய்தனர்.

தமது வீடுகள் எரிக்கப்பட்டபோது அவர்கள் இருவரும் எப்படி நடந்துகொண்டார்கள் என்று வசந்த கரனாகொட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால்,பொலிஸ்மா அதிபருக்கு பதவி நீடிப்பு வழங்கக்கூடாது என்றும் அவர்கள் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர்.

ஆளுநர்களின் செயற்பாடுகள் தொடர்பாக விசாரிப்பதற்காக வஜிர அபயர்தனவின் தலைமையில் ஒரு குழுவும் பிரதமர் தலைமையில் ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுவுக்கு உங்களது முறைப் பாடுகளை முன்வையு ங்கள். நடவடிக்கை எடுப்பேன் என்று ஜனாதிபதி உறுதிய ளித்தார்.

## அமைச்சு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பசில்.குற்றச்சாட்டுக்கள் உள்ளவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்க முடியாது என்று ஒவ்வொரு தடவையும் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார் ஜனாதிபதி.

அப்படியென்றால், குற்றச்சாட்டுக்கள் இல்லாதவர்களுக்கு வழங்குங்கள் என்று கூறி வருகிறார் பசில்.அதற்கும் உரிய இல்லை.

## சு.க.வின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கட்சியாகும்..அந்தக் கட்சி இப்போது வீழ்ந்து கிடக்கிறது.அதை இனியாவது வெற்றிமிக்க கட்சியாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு தோன்றியுள்ளது.

கட்சியில் இருந்து பிரிந்து சென்ற எம்பிக்கள்-ஆதரவாளர்கள் எல்லோரையும் மீண்டும் இணைத்து புதுப் பணம் ஒன்றைத் தொடங்குவதற்குத் திட்டமிட்டுள்ளார் மைத்திரி.

இதன் முதல் கட்டமாக கட்சியில் இருந்து அரசில் இணைத்துக்கொண்ட 9 எம்பிக்களுடன் சந்திப்புக்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளார்.

அவரது வீட்டில் பல சுற்றுச் சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளன.இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கட்சியை மீண்டும் பலப்படுத்துவதற்கு உறுதிபூண்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் விளைவாக மைத்திரிக்கும் ரணிலுக்கும் இடையில் அண்மையில் நாடாளுமன்றில் சந்திப்பொன்று இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

மைத்திரியை அரசில் இணைத்து அதில் இருந்துகொண்டே சு.கவை பலப்படுத்துவதற்கான நகர்வு இது என்று சொல்லப்படுகிறது.




## விமல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கூறியுள்ளனர்.

கடந்த வருடம் பிரதமர் பதவியில் இருந்து விலகிய மஹிந்த அரசியல் செயற்பாடுகள் எவற்றிலும் ஈடுபடவில்லை.இப்போது அவர் வீரியத்துடன் அரசியல் களத்தில் குதித்துள்ளார்.

விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள மஹிந்தவின் உத்தியோகபூர்வ இல்லம் இப்போது கலைக்கட்டியுள்ளது.தினமும் கூட்டங்கள் இடம்பெறுகின்றன.

மொட்டு கட்சியின் தலைமையகம் பத்ரமுல்லையில் அமைந்துள்ளபோதிலும்,இப்போது மஹிந்தவின் இந்த வீடே தலைமையகம்போல் காட்சி கொடுக்கிறது.

மொட்டு உறுப்பினர்கள் பலர் பத்ரமுல்லையில் இடம்பெறும் கூட்டங்களைத் தவிர்த்து வருகின்றனர். அந்தக் கூட்டங்களை பசில் ராஜபக்ஸ நடத்திவருவதால் அவர்களுக்கு அதில் உடன்பாடில்லை.

இதனால் இப்போது அவர்கள் மஹிந்தவின் வீட்டில் இடம்பெற்று வரும் கூட்டங்களிலேயே கலந்துகொள்கின்றனர்.அவர்கள்தான் விமல் தரப்பை இணைக்கும் யோசனையை முன்வைத்துள்ளனர்.

பசிலுக்கும் விமலுக்கும் ஆகாது. அதனால் பசிலுடன் சேர்ந்து இந்த நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது என்பதாலும் விமலும் மஹிந்தவும் நீண்ட நெருக்கம்கொண்டவர்கள் என்பதாலும் மஹிந்தவை இணங்க வைத்தே விமலை வளைக்கும் நடவடிக்கையை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர் என்று அறிய முடிகிறது.

# எங்களால் முடியாவிட்டால் வேறு எவராலும் முடியாது



இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு எங்களால் முடியாவிட்டால் வேறு எவராலும் முடியாது.மக்கள் எங்களுக்குத் தருவது ஒரு வாய்ப்புதான் அந்த வாய்ப்பை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

-இவ்வாறு கூறியுள்ளார் ஜேவிபி உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி,அவர் மேலும் கூறுகையில்

எங்களுக்கு இன்னும் பிரச்சினைகள் வரலாம். பரவாயில்லை.மக்களுக்காக-இந்த நாட்டுக்காக அனைத்தையும் தாங்கிக்கொள்வோம்.நாட்டைக் கட்டியெழுப்புவோம்.

எப்படியும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடக்காது.அது உறுதி.இருந்தும்,தேர்தலைப் பெறுவதற்காக நாம் போராடுவோம்.

இந்த அரசுக்கு பணம் ஒரு பிரச்சினை இல்லை.பணம் இல்லாமையால் தேர்தலை ஒத்திப்போடவில்லை. தோல்வி பயத்தால்தான் ஒத்திப்போடுகிறார்கள்.

தேர்தல் மக்களின் உரிமை. அதை அவர்களுக்கு வழங்கியே ஆக வேண்டும்.அதை மறுக்கும் உரிமை இந்த அரசுக்கு கிடையாது.தேர்தல் நடக்கும்வரை போராடுவோம்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்ப எங்களால் மட்டுமே முடியும். எங்களால் முடியாவிட்டால் வேறு எவராலும் முடியாது.மக்கள் எங்களுக்குத் தருவது ஒரு வாய்ப்புதான் அந்த வாய்ப்பை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.அதை நாங்கள் புரிந்துகொண்டே வேலை செய்கிறோம்.என்றார்.

# பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு தந்தால் அரசுடன் இணைவேன்



ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய சூத்திரதாரிகளைக் கண்டு பிடிப்பதற்காக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு பதவி வழங்கினால் தான் அரசுடன் இணைவேன் என்று முன்னாள் எம்பி முஜிபுர் ரஹ்மான் கூறினார்.

சிங்கள தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற விவாத நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட அவர் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பேசினார்.

அதே நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஜனாதிபதியின் ஆலோசகர் ஆசுமாரசிங்க அரசுடன் வந்து இணையுமாறு முஜிபுர் ரஹ்மானைக் கேட்டுக்கொண்டார்.

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய சூத்திரதாரிகளைக் கண்டு பிடிப்பதற்காக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு பதவி வழங்கினால் தான் அரசுடன் இணைவேன் என்று கூறினார்.

அதற்கு நீங்கள் எம்பி இல்லையே என்றார் ஆசு.எனது கட்சியில் உள்ள தேசிய பட்டியல் எம்பி ஒருவரை விலகச் செய்து நான் எம்பியாகி வருகிறேன் என்று கூறினார்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் நான் ஜனாதிபதியுடன் பேசுவதற்குத் தயார். நீங்கள் முடிந்தால் சந்திப்பை ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறினார் முஜீப்.

# ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகிறார் ரணில்!!!

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்குத் தயாராகிறார். அதற்காகத்தான் இத்தனை வேலையையும் செய்கிறார் என்று ஐக்கிய மக்கள் சக்தி எம்பி அசோக அப்யசிங்க கூறியுள்ளார்.அவர் மேலும் கூறுகையில்

நாடு வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டது.கடன்களை அடைப்பதற்கு தேசிய சொத்துக்களை விற்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அரசு கூறுகிறது.

அரசுக்கு பாரமாக இருக்கின்ற நிறுவனங்களை மாத்திரம்தான் மறுசீரமைக்குமாறு ஐஆகு கூறியது. ஆனால்,அரசு இலாபமீட்டும் நிறுவனங்களை விற்கப்போகிறது.

எமது கட்சி அனைத்தையும் விற்றுச் சாப்பிடும் நிலையில் இல்லை. ஆனால்,அரசோ எல்லாவற்றையும் விற்றுத் தின்னும் நிலைப்பாட்டில் உள்ளது.

அரச நிறுவனங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கினால் அவர்கள் இலாபத்தை டொலர் மூலமே எடுத்துச் செல்வார்கள்.எமது நாட்டின் டொலர்தான் குறையும்.

கடன் வாங்கினால் பட்டாசு சுட்டு கொண்டாடும் நிலைக்கு இந்த அரசு தள்ளப்பட்டுள்ளது.அரசு மேலும் இரண்டு வரிகளை அறிமுகப்படுத்தவுள்ளது.இதனால் நாட்டு மக்களின் நிலைமை மேலும் மோசமாகும்.

பொருளாதாரம் முன்னேற வேண்டுமென்றால் ஏற்றுமதி உயர வேண்டும். ஆனால்,ஏற்றுமதியாளர்களிடம் 30 வீத வரியை அறவிடுகிறது அரசு.30 வீதம் அறவிட்டால் எப்படி பொருளாதாரம் வளரும்? நாட்டுக்கு எப்படி டொலர் வரும்?

இவை அனைத்தும் மாற்றப்பட வேண்டும்.மாற்றி மக்களின் வாழ்வை முன்னேற்ற வேண்டும்.59 லட்சம் குடும்பங்கள் வாழ முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.10 லட்சம் தொழில் வாய்ப்புகள் பறிபோயுள்ளன.

நாங்கள் ஆரம்பத்தில் ஐக்கிய தேசிய கட்சியில்தான் இருந்தோம். அதற்காக நாம் ஐக்கிய தேசிய கட்சியின் பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றவில்லை. நாங்கள் புதிய கட்சி.காலத்துக்கு ஏற்ப புதிய பொருளாதாரத் திட்டம் எம்மிடம் உண்டு.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்குத் தயாராகிறார். அதற்காகத்தான் இத்தனை வேலையையும் செய்கிறார். என்றார்.



# தனியார் மயமாக்கல் தப்பில்லை



அரசால் முகாமைத்துவம் செய்ய முடியாத அரச நிறுவனங்கள் கட்டாயம் தனியாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் எம்பியுமான அஜித் பெரேரா கூறினார்.அவர் மேலும் கூறுகையில்,

நாணய நிதியத்தின் கடன் உதவி கிடைத்ததும் சிலர் பட்டாசு சுட்டு மகிழ்கிறார்கள்.கஷ்டப்படும் மக்களுக்கு அப்படி உதவி கிடைத்தால் மகிழ்ச்சிதான்.

ஆனால்,இதில் முக்கியமான ஒன்றைக் கவனிக்க வேண்டும்.அதுதான் இந்தக் கடனைப் பெறுவதற்காக நாணய நிதியத்துடன் இலங்கை அரசு செய்துகொண்ட ஒப்பந்தம்.அதில் எதையும் மறைக்காமல் அரசு அப்படியே அந்த ஒப்பந்தத்தை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்.இதை மக்கள் கட்டாயம் அறிய வேண்டும்.

அரசால் முகாமைத்துவம் செய்ய முடியாத அரச நிறுவனங்கள் கட்டாயம் தனியாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.ஆனால்,பெட்ரோலியம் நட்டத்தில் ஓடவில்லை.

அப்படி இருக்கும்போது ஏன் புதிய பெட்ரோல் செட்களை திறப்பதற்கு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்? போட்டி கூடும்போது விலை குறைந்தால் பரவாயில்லை.இங்கு விலை பற்றி எந்தப் பேச்சும் இல்லை.இதனால் எமது பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்போகிறது.என்றார்.

# பேஷ்புக்கில் படம் போடுவதாக இருந்தால் இனி ரணிலிடம்தான் கேட்க வேண்டும்



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டால்.பேஷ்புக்கில் படம் ஒன்று போடுவதாக இருந்தாலும் இனி ரணிலிடம்தான் கேட்க வேண்டும் என்று ஜேவிபி உறுப்பினர் வசந்த சமரசிங்க கூறினார்.அவர் மேலும் கூறுகையில்:

மக்கள் ஆணை இல்லாமல் நாடாளுமன்றத்தால் ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்யப்போகிறார்.அதற்கு மொட்டு கட்சியினர் ஆதரவு வழங்குகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்திடம் நிதி கிடைத்தது ஏதோ வீரச் செயல்போல் நினைக்கிறார்கள் இவர்கள்.இந்த வீரச் செயலை வைத்துத்தான் தொழில்சங்க போராட்டங்களை அடக்குகிறார்கள்.

அதுமட்டுமா,பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வரப்போகிறார்கள். பேஷ்புக்கில் படம் ஒன்று போடுவதாக இருந்தாலும் இனி ரணிலிடம்தான் கேட்க வேண்டும்.

ஐஅக நிதி கிடைத்தமைக்காக பட்டாசு சுடுகிறார்கள்.ஐஅக இன் நிபந்தனைமுழுமையாக நடைமுறைக்கு வரும்போது ரணில்-ராஜபக்ஸ குழு உடம்பில் பட்டாசுகளை கட்டிக்கொண்டு காட்டுக்குள் பாயும் நிலை வரும்.

ஐஅக இடம் சென்று முன்னேறிய நாடுகள் கிடையாதுமுன்னேறவும் முடியாது.இது பொருளாதாரத்தை நெருக்கும் ஒன்று.பணம் இருக்கின்றவர்கள் வாழ்வார்கள்இல்லாதவர்கள் விஷம் அறிந்து சாவார்கள்

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு பெட்ரோலியத்தை விற்பது-அவர்கள் இங்கு செட் திறப்பதற்கு அனுமதிப்பது பிழை. அவர்கள் மாதம் 800 கோடி இலாபத்தைப் பெறுவார்கள்.அது திறைசேரிக்கு கிடைக்க வேண்டிய பணம்.இல்லாமல் போகும். என்றார்.

# நிலைமை எப்படி மாறிவிட்டது பார்த்தீர்களா









**மத்திய வங்கி என்றால் – மத்திய வங்கி ஊழல் என்றால் என்னவென்று தெரியாத கிழவிகள்கூட மத்திய வங்கி ஊழல்பற்றிப் பேசும் நிலை ஏற்பட்டது. ரணில் மத்திய வங்கிற்குள் புகுந்து அங்கிருந்த பணத்தையெல்லாம் திருடிக்கொண்டு போய்விட்டார் என்றுதான் கிழவிகள் புரிந்து வைத்திருந்தார்கள்.**

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லைநிரந்தர எதிரிகளும் இல்லை. அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா. அரசியல் என்பது ஒரு சாக்கடை.

அரசியல் சார்ந்த இப்படியான பல வசனங்களை நாம் அடிக்கடி கேள்விப்பட்டு வருகிறோம்.ஆனால்,அவற்றுக்கு ஒப்பான சம்பவங்களை இப்போதுதான் நாம் கண்டு வருகிறோம்.இந்த அரசியல் நடக்கின்ற கூத்துக்கள் மேற்படி வசனங்களை மெய்ப்பித்து வருகின்றன.

ஒரு காலத்தில் ரணில் விக்ரமசிங்க என்பவர் ஒரு கோமாளி.மிஸ்டர் பீன் என்று அழைத்தார்கள்.மிகவும் கேவலப்படுத்தினார்கள்.நக்கலடித்தார்கள். தோல்வியடைந்த தலைவர் என்று வர்ணித்தார்கள்.

ரணிலை கிண்டல் செய்தவர்கள்–கேவலப்படுத்தியவர்கள்–தூற்றியவர்கள் வேறு யாருமல்ல.இப்போது ரணிலைத் தலையில் தூக்கி வைத்திருக்கும் மொட்டுத் தரப்பினர்தான்.

ரணில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக இருக்கும்வரை எதிர் தரப்புக்கு அதாவது மஹிந்த தரப்பு வெற்றிதான் என்றார்கள்.அதற்காகவே ரணில் விக்ரமசிங்க அக்கட்சியின் தலைவராகவே இருக்க வேண்டும் என்று மஹிந்த தரப்பு விரும்பியது.

ரணிலுக்கு எதிரான–ரணிலை ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் பதவியில் இருந்து நீக்குவதற்கான போராட்டம் அக்கட்சிக்குள் எழுந்தபோதெல்லாம் மஹிந்த தரப்பு மறைமுகமாக ரணிலுக்கு ஆதரவாகவே இருந்து வந்தது.

ஒரு தடவை சிறிகொத்தாவுக்கு முன்பாக ரணிலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.அந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் ரணிலை கட்சியின் தலைவர் பதவியில் இருந்து நீக்குவதற்காக போராடிய ஐக்கிய தேசிய கட்சிக்காரர்கள்.

ஆனால்,அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச வித்தியாசமான யுக்தியைப் பயன்படுத்தி அந்தப் போராட்டத்தைத் தடுத்தார்.

அன்றைய தினம் உடனடியாக சிறிகொத்தாவுக்கு முன் உள்ள வீதியை கார்பட் இட்டு புதுப்பிக்கும் வேலையைத் தொடங்கினார்.வீதி செப்பனிடப்படுவதால் அந்த வீதியில் நின்று ஆர்ப்பாட்டம் செய்ய முடியவில்லை.இதனால் அந்தப் போராட்டம் ரத்தானது.

இப்படி ரணிலை ஐக்கிய தேசிய கட்சித் தலைவராகப் பாதுகாத்து வந்தது மஹிந்த தரப்பு.அவர்கள் நினைத்ததுபோல் ரணில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக இருக்கும்வரை மஹிந்த தரப்புக்கு வெற்றிதான்.

இப்போது நிலைமையைப் பார்த்தீர்களா? தன்னைக் கேவலப்படுத்தியவர்களின் குகைக்குள்ளயே புகுந்து–அவர்களின் பூரண ஆதரவைப் பெற்றுக்கொண்டு–அவர்களுக்குச் சொந்தமான உயர் ஆசனத்தையே கைப்பற்றிவிட்டார்.

அந்தத் தரப்பிற்குள் யாரெல்லாம் கடுமையாகத் துள்ளினான்ர்களோ–யாரெல்லாம் ரணிலை கடுமையாக விமர்சித்தார்களோ–யாரெல்லாம் அவரை கிண்டல் செய்தார்களோ அவர்களைத்தான் முதலில் வளைத்துப் போட்டுள்ளார் ரணில்.

அவர்களின் வாயாலேயே ரணிலை புகழச் செய்துள்ளார்.ரணில் கொண்டு வரும் திட்டங்களை ஏற்க வைத்துள்ளார். அவர்களை வைத்தே அந்தத் திட்டத்தை மக்கள் மத்தியில் சந்தைப்படுத்துகிறார்.

ரணிலை மத்திய வங்கி திருடன் என்றார்கள்.இப்போது அந்தக் கதையே இல்லை.ரணில் ஆட்சிக்கு வந்தால் அரச நிறுவனங்களை விற்றுவிடுவார் என்றார்கள்.

இப்போது அவர் அரச நிறுவங்களை விற்பதை இவர்கள் இப்போது சரி என்கிறார்கள்.

நிலைமை எப்படி மாறிவிட்டது பார்த்தீர்களா?

ரணிலுக்கு எதிராக அன்று கடுமையாகத் துள்ளியவர்களுள் முதன்மையானவர் மஹிந்தானந்த அளுத்கமதான். ரணிலைத் திருடர் என்றும் கோமாளி என்றும் அதிகம் வர்ணித்தவர் அவர்தான்.

நல்லாட்சியில் ரணில் செய்த ஊழல் என்று கூறிக்கொண்டு வழி 10 என்ற தலைப்பில் 10 ஊழல்களை வெளிப்படுத்தினார்.மத்திய வங்கி மோசடியைப் போதும் போதும் என்கிற அளவுக்கு மக்களிடம் கொண்டு போய்ச் சேர்த்தார்.

மத்திய வங்கி என்றால்–மத்திய வங்கி ஊழல் என்றால் என்னவென்று தெரியாத கிழவிகள்கூட மத்திய வங்கி ஊழல்பற்றிப் பேசும் நிலை ஏற்பட்டது.ரணில் மத்திய வங்கிற்குள் புகுந்து அங்கிருந்த பணத்தையெல்லாம் திருடிக்கொண்டு போய்விட்டார் என்றுதான் கிழவிகள் புரிந்து வைத்திருந்தார்கள்.

அந்தளவுக்கு மஹிந்தானந்தவின் பிரசாரம் அமைந்திருந்தது.2018 உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மொட்டு கட்சி அபார வெற்றி பெறுவதற்குக் காரணமே இந்த மத்திய வங்கி ஊழலுக்கு எதிரான பிரச்சாரம்தான்.

ரணிலை அடிக்கடி மிஸ்டர் பீன் என்று கிண்டல் செய்து வந்தவர் மஹிந்தானந்ததான்.

2007 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தோல்வியடைந்தபோது நாடாளுமன்றில் ரணிலுக்கு முன்பாக மலர் வலயத்தை வைத்து அவருக்கு உயிருடனேயே அஞ்சலி செலுத்தியவர் மஹிந்தானந்த.

ரணிலை சிறைக்கு அனுப்பாமல் எனக்குத் தூக்கம் வராது என்றார்.

இன்று நிலைமையைப் பாருங்கள்.எப்படி மாறிவிட்டது.

ரணிலை எந்தளவு தூற்றினாரோ அந்தளவு இப்போது தூக்கிப் பிடிக்கிறார். ரணிலை போன்ற தலைவர் இல்லை என்கிறார்.அவரால் மட்டும்தான் வீழ்ந்து கிடக்கும் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப முடியும் என்கிறார்.

காலம் எவ்வளவு வேகமாக சுழல்கிறது பார்த்தீர்களா...இவர்கள் எப்படி ரணிலிடம் சரணடைந்துவிட்டார்கள் பார்த்தீர்களா...

மஹிந்தானந்த மட்டுமா..பந்துல குணவர்தன...ரோஹித அபயவர்தன.இப்படி பலர்.

மத்திய வங்கி மோசடியை பிரசாரப்படுத்துவதில் முன்னணியில் இருந்து செயற்பட்டவர்களுள் பந்துலவும் ஒருவர்.

இன்று அவரும் ரணிலைத் தூக்கிப் பிடிக்கிறார்.ரணிலின் தனியார்மயப்படுத்தல் திட்டத்தை அப்படியே ஆமோதிக்கிறார்.

உண்மையில் ரணில் கெட்டிக்காரர்தான்.அபார மூளைசாலி.

இவர்களுக்கே தெரியாமல் இவர்களை வைத்தே–தன்னைத் தூற்றியவர்களை வைத்தே தன்னைப் புகழ வைக்கிறாரே....அதுதான் ரணில்...

– ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக் –

**2007 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தோல்வியடைந்தபோது நாடாளுமன்றில் ரணிலுக்கு முன்பாக மலர் வலயத்தை வைத்து அவருக்கு உயிருடனேயே அஞ்சலி செலுத்தியவர் மஹிந்தானந்த.**

**இப்போது நிலைமையைப் பார்த்தீர்களா? தன்னைக் கேவலப்படுத்தியவர்களின் குகைக்குள்ளயே புகுந்து–அவர்களின் பூரண ஆதரவைப் பெற்றுக்கொண்டு–அவர்களுக்குச் சொந்தமான உயர் ஆசனத்தையே கைப்பற்றிவிட்டார் ரணில்.**

**ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்கு நீங்கள்தான் பின்னணியில் நின்று செயற்பட்டீர்கள் என்று சொல்லப்படுகிறதே?**

**ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தால் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டமை தொடர்பில் மக்களின் நிலைப்பாட்டை அறிவதற்கான ஒரு வாய்ப்பாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் அமைவதற்கு இருந்தது. அதை அவர் தவிக்கிறார்?**

**ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணையக்கூடிய நிலைமை இல்லையே?**

**ரணில் விக்ரமசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரா?**

**2048 இல் ரணில் உயிருடன் இருப்பாரா?**



# அடுத்து இடம்பெறப்போவது

# நாடாளுமன்றத் தேர்தலா ஜனாதிபதித் தேர்தலா?

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கியுள்ளார் ஐக்கிய தேசிய கட்சி எம்பி வஜிர அபேவர்தன.அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுஉள்ளது.

**கேள்வி : ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்கு நீங்கள்தான் பின்னணியில் நின்று செயற்பட்டீர்கள் என்று சொல்லப்படுகிறதே?**

பதில் : அது பிழை.அதைவிட பின்னணி ஒன்று இருக்கிறது. ரணில்-ராஜபக்ஸ அரசு என்று குற்றம் சுமத்துகிறார்கள். அதற்கு காரணம் சஜித்-டலஸ்-ராஜபக்ச அரசை உருவாக்குவதற்கு முயற்சி செய்வதுதான்.அது முடியாமல் போனதும் ரணில்-ராஜபக்ஸ அரசு என்று குற்றம் சுமத்துகிறார்கள்.

அதேபோல் அனுர-ராஜபக்ஸ அரசை உருவாக்குவதற்கும் முயற்சி செய்யப்பட்டது.

இவை அனைத்தும் தோல்வியில் முடிந்ததால்தான் இந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆசிய நாடுகள் இலங்கையை திறமையான ஒருவர் ஆட்சி செய்வதை விரும்பவில்லை.அது ஆசிய நாடுகளுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

உண்மையில், விக்ரமசிங்க போன்ற ஒருவர் எமக்குக் கிடைத்தது பெரும் பாக்கியம்.இதை இந்த நாட்டு மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

**கேள்வி : ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தால் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டமை தொடர்பில் மக்களின் நிலைப்பாட்டை அறிவதற்கான ஒரு வாய்ப்பாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் அமைவதற்கு இருந்தது.அதை அவர் தவிக்கிறார்?**

பதில் : இப்போதைய நிலையில் மக்களுக்குத் தேவை தேர்தலா? இல்லை. பொருளாதார பிரச்சினை உள்ளது.அதை முதலில் சரி செய்ய வேண்டும் என்றே மக்கள் விரும்புகின்றனர்.

அதேபோல், 8 ஆயிரமாக இருக்கின்ற உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை 4 ஆயிரமாகக் குறைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

ஒட்டுமொத்த மக்களும் விரும்புவது இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதுதான்.

இது வங்குரோத்து அடைந்த நாடு. அப்படிப்பட்ட நாட்டுக்குத் தேவை.தேர்தல் அல்ல.மக்களை வாழ வைப்பதுதான் தேவை.

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணையக்கூடிய நிலைமை இல்லையே?**

பதில் : எமக்கு எதிர்க்கட்சி ஒன்று வேண்டுமே.அதுபோக பிரதான எதிர்க்கட்சிகள் இனியும் தலை தூக்கும் நிலைமை வராது.எல்லோரும் ஒன்றிணைந்து தேசிய இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.

ஆசியாவின் முன்னேற்றமடைந்த நாடாக இலங்கை மாற வேண்டும் என்றால் எல்லோரும் தேசிய இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள எம்பிக்கள் பலர் இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசியுள்ளார்கள் .என்னுடனும் பேசியுள்ளார்கள்.ஐக்கிய மக்கள் சக்தியை உடைத்து எடுப்பதல்ல இதன் நோக்கம்.

**கேள்வி : அடுத்து இடம்பெறப்போவது நாடாளுமன்றத் தேர்தலா ஜனாதிபதித் தேர்தலா?**

பதில் :முதலில் நாட்டை ஸ்தீரப்படுத்துவோம்.அதுதான் இப்போதைய தேவை.

**கேள்வி : ரணில் விக்ரமசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரா?**

பதில் : இலங்கை தற்போதைய பிரச்சினையை முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து ரணில் விக்ரமசிங்க நாட்டின் தலைவராக இருப்பார் என்று நான் நம்பவில்லை. அதற்கான வாய்ப்பு தொடர்ந்தும் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை.

**கேள்வி : அப்படியென்றால் வேறு யாரும் போட்டியிடவுள்ளார்களா?**

பதில் : போட்டியிட முடியும்.ஆனால்,நாட்டு மக்கள் அவரிடம் 10 அல்லது 12 வருடங்களுக்கு நாட்டை பாரம் கொடுத்தால் வேறு நாடுகளில் தொழில் வாய்ப்பு இல்லாதவர்கள் இலங்கைக்கு வேலைக்கு வரும் நிலை உருவாகும்.

அப்படிப்பட்ட அபிவிருத்தியடைந்த நாடாக அவர் மாற்றுவார்.நாட்டை விட்டு வெளியேறிய எமது இளைஞர்கள் அந்த நாடுகளைவிட இந்த நாட்டில் அதிக சம்பளம் பெரும் நிலை உருவாகும்.

அவர் 10 வருடங்களில் நாட்டின் முழுக் கடன்களையும் அடைத்து 2048 இல் இலங்கையை முழுமையாக முன்னேற்றும் திட்டம் அவரிடம் உண்டு.

உலகில் உள்ள தலைவர்களை எடுத்துப் பாருங்கள். ரணில் மிகவும் சிறந்த -திறமையான தலைவர். அவர் நாட்டின் சொத்து. அவரை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

உண்மையை நாம் விளங்காவிட்டால் எமது நாட்டுக்கு இனி எதிர்காலம் இல்லாமல் போய்விடும்.

**கேள்வி : 2048 இல் ரணில் உயிருடன் இருப்பாரா?**

பதில் : இல்லை.அவர் இருக்கம்மாட்டார் என்று அவரே கூறியுள்ளார்.அவர் பதவியேற்று 7 மாதங்களுக்குள் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார்.

உலக நாடுகள் முன்னேறியதுபோல் எமது நாடும் முன்னேற வேண்டுமென்றால் அந்த நாடுகள் பயணித்ததுபோல் எமது நாடும் பயணிக்க வேண்டும்.

அதற்கான ஏற்பாட்டைத்தான் ரணில் செய்கிறார்.மக்கள் எதிர்காலத்தில் இதைப் புரிந்துகொள்வார்கள்.

> **தொடர்ந்து ரணில் விக்ரமசிங்க நாட்டின் தலைவராக இருப்பார் என்று நான் நம்பவில்லை. அதற்கான வாய்ப்பு தொடர்ந்தும் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. அவரிடம் 10 அல்லது 12 வருடங்களுக்கு நாட்டை பாரம் கொடுத்தால் நாட்டின் நிலைமை தலைகீழாக மாறிவிடும்.**

# ரணிலை கண்டு அதிர்ந்துபோய்...

IMF நிதி கிடைத்தமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விசேட உரை ஒன்றை நாடாளுமன்றில் நிகழ்த்தினார்.

உரை முடிந்ததும் வழமைபோல் சபையில் இருந்து அரச பக்கத்து கதவால் வெளியேறிய ஜனாதிபதி அப்படியே திரும்பி எதிர்க்கட்சி பக்கம் சென்றார்.

அப்போது எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவை சூழ்ந்து எதிர்க்கட்சி எம்பிக்கள் பலர் பேசிக்கொண்டு நின்றனர்.

அந்த வழியால் திடீரென ஜனாதிபதி வருவதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இவர்களை கண்ட ஜனாதிபதி. “ஆ.. எப்படி சுகம்..” என்று விசாரித்தார் சிரித்துக்கொண்டு...

ஆச்சரியத்துடன் பார்த்த அந்த எம்பிக்கள் ““ சேர்.. நீங்க இந்தப் பக்கம் வரமாட்டீங்களே..““ என்றனர்.

“நான் வாரதான், நீங்கதான் என்னைக் கண்டும் காணாமலும் போற..““ என்று கூறினார் ஜனாதிபதி. சிரித்துக்கொண்டு...

# ரணிலுக்கு முதலாவது வாழ்த்து

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் 74ஆவது பிறந்த நாள் மார்ச் மாதம் 24 ஆம் திகதி.அவருக்கு முதலாவது வாழ்த்துச் சொன்னது யார் தெரியுமா? மஹிந்த ராஜபக்சதான்.

அன்றைய தினம் விடிந்தும் விடியாததுமாய் தொலைபேசி அழைப்பை எடுத்து வாழ்த்துத் தெரிவித்தார் மஹிந்த.

சந்தோசம்.உங்களது வாழ்ந்துதான் முதலாவது வாழ்த்து என்று கூறினார் ரணில் அப்போது.

பின்னர் நாடாளுமன்றம் சென்ற மஹிந்தவை சந்தித்த மொட்டு எம்பிக்கள் இன்று ஜனாதிபதியின் பிறந்த நாள் என்று கூறினார்கள்.

ஆமாம்..முதலாவது வாழ்த்துக் கூறியது நான்தான்.அவர் எதிர்கட்சித் தலைவராக இருக்கும்போது அவரது ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் தவறாமல் வாழ்த்துக் கூறுவேன். என்றார் மஹிந்த.





## துப்பறிவாளன்

# துப்பாக்கியுடன் காத்திருந்த எஸ்.பி.



கடந்த வாரம் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய எஸ்.பி.திஸாநாயக்க,மே 9 ஆம் திகதி எனது வீட்டுக்கும் தீ வைக்க வந்திருந்தால் நான் சுட்டிருப்பேன் என்று கூறினார்.

மறுநாள் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து எஸ்.பியை சந்தித்த சக எம்பிக்கள் அவரிடம் இதுபற்றி விசாரித்தனர்.

“ஆம்..நான் லைசன்ஸ் துப்பாக்கியோட ரெடியாத்தான் இருந்த.எனது வீட்டுக்கு பக்கத்துல வந்தாங்க.வீட்டுக்கு தீ வைக்க வரல்ல.வந்த சுட்டிருப்பேன்.எனக்கு கோதாவைப்போல பயமில்ல.என்றார்.

# அடிக்கடி போகிறாராம்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ தீவிர அரசியல் செயற்பாட்டைத் தொடங்கியதுதான் தாமதம் அவரது வீட்டுக்கு அடிக்கடி பல முக்கிய பிரமுகர்கள் வந்து



போகிறார்களாம்.

அவர்களுள் முக்கியமான ஒருவரும் அடங்குகிறாராம். அவர்தான் இலங்கைக்கான சீனத் தூதுவர்.

அவர் இப்போதெல்லாம் அடிக்கடி மஹிந்தவின் விஜேராம வீட்டுக்குச் சென்று மஹிந்தவுடன் நீண்ட நேரம் பேசிவிட்டுப் போகிறாராம்.

சீனா என்றாலே ஊடகங்கள் விழிப்படைவது வழமைதானே. அப்படித்தான் இந்த விடயத்திலும்.

# முஜீப் ரஹ்மானை விரட்டியமைக்கு பார்ட்டி

அப்போது அங்கு நின்ற எஸ்.எம். மறைக்காரைப் பார்த்து “எப்போது எங்களுக்கு பார்ட்டி தரப்போறீங்க.” என்று கேட்டார் ஜனாதிபதி.

மறைக்காருக்கு எதுவும் புரியவில்லை.

“எதுக்கு சேர் பார்ட்டி ..” என்று கேட்டார்.

“அதுதான் ..முஜீப் ரஹ்மானை பார்லிமென்டில் இருந்து வெளியே போட்டதுக்கு..” என்றார் ஒரு வகையான சிரிப்போடு...

இதைக் கேட்டதும் சஜித்-மரைக்கார் உள்ளிட்ட அனைவரும் வாயடைத்துப் போய் நின்றார்கள். எதுவும் பேச வார்த்தை வரவில்லை.

அவர்களின் நிலைமையைப் புரிந்துகொண்டு அப்படியே கதையை மாற்றினார் ஜனாதிபதி.

“IMF வேலைத் திட்டத்துக்கு சப்போர்ட் பண்ணுங்க.இது முக்கியம் அல்லவா..” என்றார் ஜனாதிபதி.

அதற்கு வெறுமனே ஒரு சிரிப்பை மட்டும் வெளிப்படுத்தினார் சஜித்.

# நாமல் அதில் இல்லை



இப்போது உறவுகள் எல்லாம் சேர்ந்திருப்பது சமூக ஊடகங்களில்தான்.அதிலும் வாட்சப் குழுமத்தில்...

உள்நாட்டில் உள்ள உறவுகளும் வெளிநாடுகளில் உள்ள உறவுகளும் மிகவும் இலகுவாக தொடர்ந்தும் உறவாடுவதற்காக இந்த வாட்சப் குழுமம் மிகவும் உதவியாக இருக்கிறது.

ராஜபக்ஸ குடும்பத்துக்கும் இப்படியொரு வாட்சப் குழுமம் இருக்கிறது.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் அந்தக் குழுமத்தில் நாமல் ராஜபக்ஸ இல்லை என்பதுதான். அதை அவரே கூறியுள்ளார்.

அவருக்கு குடும்பத்தோடு என்ன பிரச்சினையோ.யார் கண்டா...

# தொர இங்கிலீஸெல்லாம் பேசுது



பாகிஸ்தானின் தேசிய தினம் மார்ச் 21ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்றது.எமது நாட்டு அரசியல்வாதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர கலந்துகொண்டார்.அரசின் சார்பில் வாழ்த்துச் செய்தியை வெளியிட்டு அவர் ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

உரையாற்றி முடிந்ததும் அந்த நிகழ்வில் கலந்துகொண்ட சு.க தலைவர் மைத்திரிபால சிறிசேன அமரவீரவின் அருகில் சென்று முதுகில் தட்டி வாழ்த்துத் தெரிவித்தார்.

“பரவால்லியே..மஹிந்த இப்ப இங்கிலீஸெல்லாம் பேசுறீங்க என.எனக்கு ரொம்ப சந்தோசம்.” என்றார்.

- நீங்கள் இப்போது எந்த கட்சியில் இருக்கிறீர்கள்?
- மொட்டு தலைவர்கள் எடுத்த தீர்மானங்கள்–மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் சரி என்ற நிலைப்பாட்டிலா நீங்கள் இருக்கிறீர்கள்? அதன் காரணமாகவே கட்சியில் தொடர்ந்தும் இருக்கிறீர்கள்?
- தற்போதைய ஜனாதிபதி பற்றி உங்களின் நிலைப்பாடு என்ன?
- ரணில் செய்கின்ற அனைத்து நடவடிக்கைகளையும் நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?
- 13 ஆல் நாடு பிரிக்கப்படும் முறைமை பற்றிக் கூற முடியுமா?



# முற்றாக 13 ஐ ஒழிக்க வேண்டும்

## தமிழர்கள் சமஸ்டியைக் கேட்கவில்லை

**தமிழ் நாட்டின் ஆதரவைப் பெறுவதற்காகத்தான் இந்திய அரசு 13ஆம் திருத்தச் சட்டத்தை வடக்கிற்குக் கொடுப்பதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது. 13 ஆம் திருத்தச் சட்டம் இந்தியாவால் எமக்கு பலவந்தமாகத் திணிக்கப் பட்டதுதான்.**

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் சரத் வீரசேகர எம்பி.அவரது பேட்டியின் முழு விவரம் கீழே.

**கேள்வி : நீங்கள் இப்போது எந்த கட்சியில் இருக்கிறீர்கள்?**

பதில் : நான் மொட்டு கட்சிதான்.என்னை அம்பாறையில் இருந்து வந்து கொழும்பில் போட்டியிடுமாறு கோத்தாபாயதான் அழைத்தார்.3லட்சத்து 28 ஆயிரம் வாக்குகளை கொழும்பு மக்கள் எனக்கு வழங்கி என்னை வெற்றிபெற வைத்தனர்.

எந்தக் கட்சியிலும் வீழ்ச்சி –எழுச்சி என்ற இரண்டும் உண்டு. நான் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி பின்னடைவைச் சந்திக்கும்போது அதில் இருந்து விலகுவது சரியில்லை.

நாட்டின் பாதுகாப்புக்கு ஏதும் ஆபத்து ஏற்பட்டால்,அல்லது நாட்டைப் பிரிக்கும் நிலை ஏற்பட்டால் மாத்திரமே நான் கட்சியை விட்டுச் செல்வேன்.அதுவரை காட்சியில்தான் இருப்பேன்.

அதனால்தான் நான் இன்றும் மொட்டு கட்சில் உள்ளேன்.தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

**கேள்வி : மொட்டு தலைவர்கள் எடுத்த தீர்மானங்கள்–மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் சரி என்ற நிலைப்பாட்டிலா நீங்கள் இருக்கிறீர்கள்? அதன் காரணமாகவே கட்சியில் தொடர்ந்தும் இருக்கிறீர்கள்?**

பதில் : இல்லை.பிழை நடந்துள்ளது. அந்தப் பிழை ஏற்பட்ட இடம் எதுவென்று பார்க்க வேண்டும்.

**கேள்வி: தற்போதைய ஜனாதிபதி பற்றி உங்களின் நிலைப்பாடு என்ன?**

பதில் : அவர் மிகவும் இக்கட்டான நிலையில் நாட்டை பாரமேற்றார்.எதிர்க்கட்சி தலைவர்,சரத் பொன்சேகா எல்லோரும் பரமேற்பதற்கு பயந்தார்கள். எப்படி நாட்டைக் கட்டியெழுப்புவது என்று யோசித்தார்கள்.

ரணில் எதையும் யோசிக்கவில்லை. கோத்தா பிரதமர் பதவியை ஏற்குமாறு கேட்டதும் எப்போது பதவியேற்க வேண்டும் என்றே கேட்டார்.

அவரது திறமையால்–அனுபவத்தால் கோத்தா அவரை பிரதமராக நியமித்தார்.

பின்னர் அவர் ஜனாதிபதியாக பதவியேற்றதும் நிலைமையை சரி செய்துவிட்டார்.

எமது ஆலோசனைகளை கோத்தா ஏற்றிருந்தால் இதேவேலையை கோத்தாவும் செய்திருப்பார்.

இதன் காரணமாக,இந்த பொருளாதார நிலைமைக்கு மொட்டு எம்பிக்கள் பொறுப்பேற்கத் தேவை இல்லை.நாங்கள் சரியாகத்தான் யோசனை கூறினோம். கோத்தாதான் அதை உதறித் தள்ளி தன்னிச்சையாக முடிவெடுத்தார்.எல்லாம் பிழையான முடிவு.

**கேள்வி : ரணில் செய்கின்ற அனைத்து நடவடிக்கைகளையும் நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?**

பதில் :இல்லை.உதாரணத்துக்கு 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாக ரணில் கூறினார்.நாம் அதை எதிர்க்கிறோம்.

காணி அதிகாரத்தை பிரதேச செயலாளரிடம் கொடுக்கப் போவதாகக் கூறினார்.அப்படியென்றால் வரவு–செலவுத் திட்டத்துக்கு வாக்களிக்கமாட்டேன் என்று ஜனாதிபதியிடம் கூறினேன்.அதன் பாதிப்பை எடுத்துக் கூறினேன்.

அதன்பின் அதை அவர் நிறுத்தினார்.

**கேள்வி : 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : 13 முற்றாக அகற்றப்பட வேண்டும் என்பதுதான் எனது நிலைப்பாடு.13 ஐ நடைமுறைப்படுத்தினால் ஒற்றை ஆட்சியின் கீழ் இருக்கின்ற நாடு சமஸ்டி ஆட்சிக்கு உட்படும்.

ஒற்றை ஆட்சியின்கீழ் நாடு முழுவதும் ஒரே நீதி.சமஸ்டி ஆட்சியின்கீழ் மாகாணத்துக்கு மாகாணம் நீதி வேறுபடும்.

இதனால் நாடு துண்டு துண்டாகப் பிரியும்.

வடக்கு தமிழர்களின் துன்பத்தைப் போக்குவதற்குத்தான் சமஸ்டி தேவை என்று கேட்கிறார்கள்.அப்படியென்றால் 52 வீதமான தமிழர்கள் வாழ்வது தெற்கில்.வடக்கிற்கு சமஸ்டியைக் கொடுத்தால் தெற்கு தமிழர்களின் பிரச்சினைகளை அது எப்படித் தீர்க்கும்?

**கேள்வி : சமஸ்டியின் தேவை யாருக்கு? மக்களுக்கா ...? அரசியல்வாதிகளுக்கா?**

பதில் : தமிழ் மக்கள் இதைக் கேட்கவில்லை.பிரிவாத அரசியல்வாதிகளும் தமிழ் டயஸ்போறாக்களுமே சமஸ்டியைக் கேட்கின்றனர்.சில சிங்கள அரசியல்வாதிகளும் இதற்கு உதவுகின்றனர்.

**கேள்வி : 13ஐ நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அழுத்தம் கொடுப்பது இந்தியாவா?**

பதில் : ஆம்.. தமிழ் நாட்டின் ஆதரவைப் பெறுவதற்காகத்தான் இந்திய அரசு 13ஐ வடக்கிற்கு கொடுப்பதற்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.13 ஆம் திருத்தச் சட்டம் இந்தியாவால் எமக்கு பலவந்தமாகத் திணிக்கப்பட்டதுதான்.

இதில் இருக்கின்ற பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் பிரதி பொலிஸ்மா அதிபர் முதலமைச்சரின்கீழ் வருவார்.அப்போது பொலிஸ் அரசியல்மயமாகிவிடும்.

**கேள்வி : 13 ஆல் நாடு பிரிக்கப்படும் முறைமை பற்றிக் கூற முடியுமா?**

பதில் : அநேகமாக 13 இல் இருக்கின்ற பல விடயங்கள் கொடுக்கப்பட்டுவிட்டன. காணி மற்றும் பொலிஸ் அதிகாரம்தான் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

உதாரணத்திற்கு பொலிஸ் அதிகாரத்தைக் கொடுத்தால் வடக்கின் கடல் பாதுகாப்புக்கு என்று தனியான பொலிஸ் – இராணுவ பிரிவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னால் மத்திய அரசு அதை எதிர்க்கும். அப்போது இரு தரப்புக்கும் பிரச்சினை ஏற்படும்.

அரசு மாகாண சபையின் தீர்மானத்துக்கு இடம் கொடுப்பதில்லை என்று கூறி பிரிந்து செல்வதற்கு வாய்ப்புண்டு – என்றார்.





வவுனியா வேப்பங்குளம் ஓமந்தை எக்ஸ்போ ஸ்டீல் ஹாட்வெயர் நிலையத்தின் உரிமையாளரும் சமூகசேவையாளருமான ஆ. சுரேஸினால் அரசமுறிப்பு ஓமந்தை நொச்சிமோட்டைப் பிரதேசத்தில் வசித்துவரும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை செல்லும் 34 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.






# பண முதலைகளாக மாறியுள்ள சமாதான நீதவான்கள்

**எம்.எல்.எஸ்.முஹம்மத்**
lk.mlsmohamed@gmail.com

சாரா பர்வீன் இவர் இரத்தினபுரி நகரிலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவிலுள்ள ஹபுகஸ்தென்ன தோட்டப் பகுதியைச் சேர்ந்தவர் . ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் உதவி மேற்பார்வையாளராக கடமை புரிந்து வரும் சாரா தனது மூன்று பிள்ளைகளையும் தமிழ் மொழி மூலப் பாடசாலையொன்றில் சேர்த்து நல்ல முறையில் அவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார். எனினும் தந்தை அன்வர் ஜாஸிம் சிங்கள மொழியில் கற்றதனால் கடைசி மகனாகப் பிறந்திருந்த இல்ஹாம் பரீதை தான் படித்த இரத்தினபுரி நகரத்திலுள்ள பிரபல சிங்கள மொழிப் பாடசாலையில் சேர்த்து அழகு பார்க்க ஜாசிம் ஆசைப்பட்டான்.

சாராவும் ஜாசிமும் இதற்காக இரண்டு வருடங்களுக்கு முன்னரே இரத்தினபுரி நகரிலுள்ள வாடகை வீடொன்றிக்கு குடிபெயர்ந்து பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். மகன் இல்ஹாமை சிங்கள மொழி மூல முன்பள்ளியொன்றிக்கு அனுப்பி அவனை அவர்கள் சிங்கள மொழியில் தயார்படுத்திக் கொண்டிருந்தார்கள்.இல்ஹாமிற்கு ஐந்து வயது எட்டியதும் அவர்கள் குறித்த பாடசாலைக்கு தரம் ஒன்றிற்கு இணைக்க உரிய ஆவணங்களை நிரப்பி விண்ணப்பிக்க ஆயத்தமானார்கள்.

எனினும் மகன் இல்ஹாமின் பெயர் இல்காம் என பிறப்புச் சான்றிதழ் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததால் சமாதான நீதவான் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உறுதிமொழிக் கடிதம் ஒன்றையும் மகனின் விண்ணப்பத்துடன் இணைக்க அவசியமாக இருந்தது.இறுதியில் இதற்காக அப்பகுதியைச் சேர்ந்த சமாதான நீதவான் ஒருவரின் கையொப்பத்துடன் மகனின் தரம் ஒன்றிற்கான விண்ணப்பப்படிவம் குறித்த பாடசாலைக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

தரம் ஒன்றிற்கு புதிய மாணவர்களை சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை இடம்பெறுவதற்கு சில வாரங்களுக்கு முன் தந்தை ஜாஸிமுக்கு பாடசாலையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதத்தில் சமாதான நீதவானினால் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் பெயர் மாற்றம் தொடர்பான சத்தியக் கடதாசிகள் எதுவும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதனால் உங்கள் மகனின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது என அக்கடிதத்தின் ஊடாக அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.இறுதியில் இரத்தினபுரி நகரிலுள்ள எந்தவொரு சிங்கள மொழி மூலப் பாடசாலையிலும் மகனை சேர்க்க அனுமதி கிடைக்காத நிலையில் மீண்டும் தமது ஊரிலுள்ள தமிழ் மொழி மூல தோட்டப் பாடசாலையிலேயே மகனை சேர்க்க நேர்ந்தது என தந்தை ஜாஸிம் தெரிவிக்கிறார்.

தந்தை ஜாஸிம் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் “மக்களுக்கு சேவையாற்றும் நோக்குடன் சமூகத்திலுள்ள கௌரவமான பிரஜைகளுக்கு வழங்கப்பட வேண்டிய சமாதான நீதவான் பதவிகள் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டு வருகிறது. தகுதியற்றவர்கள் பலர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டு வருகின்றனர்.எவ்வாறு ஆவணங்களை அத்தாட்சிப்படுத்த வேண்டும் என்பது பற்றிய எந்தவொரு அடிப்படை அறிவும் பயிற்சியும் அற்ற ஒரு சமாதான நீதவானிடம் எனது மகனின் ஆவனங்களை அத்தாட்சிப்படுத்த நேர்ந்ததால் இறுதியில் எனது மகனின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதுடன் மகன் பற்றிய எமது எதிர்காலக் கனவுகளும் கலைந்தன”, என அவர் மிகுந்த வருத்தத்துடன் தெரிவிக்கிறார்.

ஜாஸிமின் குற்றச்சாட்டு தொடர்பில் குறித்த சமாதான நீதவானிடம் கேட்ட போது “கடந்த பல வருடங்களாக எனது காரியாலய உதவியாளரின் ஒத்துழைப்புடனேயே அனைத்து ஆவணங்களையும் உறுதிப்படுத்தி வருகிறேன்.எனினும் அன்றைய தினம் எனது உதவியாளர் வாராததால் நானே அனைத்தையும் மேற்கொண்டேன். நான் உரிய முறையில் ஆவணங்களை உறுதிப்படுத்தியிருந்தால் ஜாசிமின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருக்காது.இது தொடர்பில் எனது வருத்தத்தை தெரிவிக்கிறேன்”, என அவர் தெரிவிக்கிறார்.

பொது மக்களால் சமர்ப்பிக்கப்படும் பிரமாணப் பத்திரங்கள் மற்றும் ஆவணங்கள் உட்பட பிற சான்றிதழ்களை சான்றளித்தல் மற்றும் அங்கீகரித்தல் ஊடாக பொது மக்களுக்கு இலவசமான சேவைகளையும் பணிகளையும் வழங்கும் நோக்குடன் கௌரவ நீதி அமைச்சரால் சமாதான நீதவான்கள் நியமிக்கப்பட முடியுமென 1978 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க 4ஆம் உப பிரிவு தெளிவு படுத்துகிறது.

இதன் அடிப்படையில் வருடாந்தம் ஆயிரக்கணக்கானவர்கள் சமாதான நீதவான்களாக கௌரவ நீதி அமைச்சரால் நியமிக்கப் படுகின்றனர்.சிலர் குறித்த நிர்வாக மாவட்டத்திற்குள் மாத்திரம் பணிபுரியும் மாவட்ட சமாதான நீதவான்களாகவும் மற்றும் பலர் முழுத் தீவிலும் பணியாற்றும் வகையிலான அகில இலங்கை சமாதான நீதவான்களாக நியமிக்கப்படுகின்றனர். அதேபோல அரசினால் நியமிக்கப்படும் பதவி தாங்குநர்களில் சிலர் தமது பதவிக்காலம் நிறைவு பெறும் வரையில் சமாதான நீதவான்களாக செயற்படுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தேசிய நலனிற்கும் சமூக மேம்பாட்டிற்கும் பங்காற்றியமையையிட்டு நற்பிரஜையினருக்கு மாத்திரம் வழங்கப்பட வேண்டிய இவ்வுயர் கௌரவப் பதவி இன்று பிரதேச அரசியல்வாதிகளினதும் கட்சி அமைப்பாளர்களினதும் மற்றும் அமைச்சர்களினதும் விருப்பத்திற்குரியவர்களுக்கும்,ஆதரவாளர்களுக்கும் வழங்கப்படும் சேவைக் கைமாறாக மாறியுள்ளது என பிரபல மனித உரிமை செயற்பாட்டாளர் ஷமிந்த பியசேகர தெரிவிக்கிறார்.

ஆவணங்களை அத்தாட்சிப்படுத்துவது மாத்திரமின்றி கிராமிய மக்கள் மத்தியில் சமாதானம் மற்றும் சகவாழ்வு உட்பட அனைத்து பொதுநலப் பணிகளிலும் சேவை மனப்பான்மையுடன் பங்கேற்க வேண்டுமெனவும் அனைத்து சமாதான நீதவான்களிடமும் அரசு எதிர்பார்க்கிறது. அத்துடன் மேற்படி அனைத்து சேவைகளையும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பிற்கு முரணின்றியும்,முற்றிலும் இலவசமாகவும் மேற்கொள்ள வேண்டும் எனவும் மேலும் எதிர்பார்க்கிறது.இது தொடர்பாக நீதி அமைச்சின் ஊடாக அனைத்து சமாதான நீதவான்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் நீதிமன்ற நீதவான்கள் முன்னிலையில் இடம்பெறும் சத்தியப் பிரமாணத்தின் போதும் அவர்கள் உறுதி அளிக்கின்றனர்.

எனினும் மேற்படி அனைத்து சட்ட திட்டங்கள் மற்றும் உறுதி மொழிகள் அனைத்தையும் மீறும் வகையில் நாட்டின் பல இடங்களில் சமாதான நீதவான்கள் செயற்பட்டு வருவதாகவும் இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது எனவும், அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்படுமிடத்து அவர்கள் சமாதான நீதவான் பதவிகளிலிருந்து நீக்கப்படுவதுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என நீதி அமைச்சின் அறிக்கை தெரிவிக்கிறது.

கொழும்பிலுள்ள கடவுச்சீட்டு அலுவலகம், பிராந்திய போக்குவரத்து திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் உட்பட கிராமிய அரச அலுவலகங்கள் அமைந்துள்ள வளாகங்களை அண்மித்து பல சமாதான நீதவான்கள் சட்டவிரோதமான நடவடிக்கைகளில் தயக்கமின்றி ஈடுபட்டு வருகின்றனர். தூரப் பிரதேசங்களிலிருந்து வரும் பலர் மேற்படி சமாதான நீதவான்களிடம் பல ஆயிரக்கணக்கான ரூபாக்களையும் முக்கிய ஆவணங்கள் பலதையும் இழந்துள்ளனர் என பாதுகாப்புத் தரப்பு தெரிவிக்கிறது.

ஆவனங்களை அத்தாட்சிப்படுத்தல் தொடர்பில் இரத்தினபுரி மாவட்ட சமாதான நீதவான் ஒருவரிடம் மூவாயிரம் ரூபா பணத்தையும் முக்கிய ஆவனங்களையும் இழந்த ஏ.ஆர்.எம்.ருக்கையா நோனா கருத்து தெரிவிக்கையில்

“கடந்த 2017ஆம் ஆண்டு இரத்தினபுரியில் ஏற்பட்ட வெள்ள அனர்தத்தின்போது எனது தேசிய அடையாள அட்டை உட்பட அனைத்து அரச ஆவணங்களும் அழிந்து போயின.இதனால் அரசின் எந்தவொரு நிவாரண உதவியையும் என்னால் பெறமுடியவில்லை.இது தொடர்பான முறைப்பாடுகளை அரசிற்கு சமர்ப்பிப்பதற்காக சமாதான நீதவான் ஒருவரிடம் உதவி கோரிய போது அவர் ஐயாயிரம் ரூபா பணம் கேட்டிருந்தார்.என்னால் அதனை வழங்க முடியவில்லை.இறுதியில் எந்த அரச உதவியையும் பெற முடியாமல் போனது”, என அவர் கண்ணீருடன் தெரிவிக்கிறார்.

வரகாபொல பகுதியைச் சேர்ந்த டீ.எஸ். பௌஸுல் அமீர் கருத்து தெரிவிக்கையில்

“எமது பகுதியைச் சேர்ந்த சமாதான நீதவான் ஒருவர் மரணம் அடைந்த தாயின் ஓய்வூதியத்தை மகன் பெறுவகையில் போலிச் சான்றிழ்களில் கையொப்பம் இட்டதால் அவரின் சமாதான நீதவான் பதவி பறிக்கப்பட்டது.அத்துடன் அரச நிதி மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் வழக்கொன்றையும் அவர் எதிர்கொண்டு வருகிறார்”, என அவர் தெரிவிக்கிறார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் “எமது பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு சமாதான நீதவான் தன்னிடம் சான்றிதழ்களை அத்தாட்சிப் படுத்த வருவோரிடம் ஐநூறு முதல் ஆயிரக்கணக்கில் பணம் பெறுகிறார்.அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளராகவும் செயற்பட்டுவரும் மேற்படி சமாதான நீதவானின் செயற்பாடுகள் தொடர்பில் பாரிய விமர்சனங்கள் உள்ளன.இவைகள் அனைத்தும் உடனடியாக கட்டுப்படுத்தப்பட வேண்டும்.இல்லாதபோது ஏழைப் பொது மக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்”, என அவர் தெரிவிக்கிறார்.

சமாதான நீதவான்களின் தரத்தை உயர்த்துவது தொடர்பில் முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரி கருத்து தெரிவிக்கையில் “சமாதான நீதவான் நியமனத்திற்கு க.பொ.த.சாதாரண தர அறிவு அடிப்படை கல்வித் தகைமையாக கொண்டுவரப் பட வேண்டும்”, என தெரிவிக்கிறார்.

எனினும் இதுவரை க.பொ.த.சாதாரண தர அறிவு சட்ட ரீதியான அடிப்படை கல்வித் தகைமையாக கொண்டுவரப்படவில்லை. இதனால் அடிப்படைக் கல்வி அறிவுகள் எதுவும் இல்லாதவர்கள் கூட ஆயிரக்கணக்கான அளவில் சமாதான நீதவான்களாக நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்டு வருகின்றனர் என்பதை அமைச்சின் புள்ளிவிபரத் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

உலக நாடுகள் அனைத்திலும் மிகவும் கௌரவமாக மதிக்கப்படும் சமாதான நீதவான் பதவி இலங்கையில் அரசியல் வாதிகளால் தீர்மானிக்கப்படும் பதவியாக மாறியுள்ளதால் அதன் உண்மையான மதிப்பையும் கௌரவத்தையும் அது இழந்து வருகிறது.இதற்கு மாறாக இந்நியமனம் தொடர்பான சட்ட மூலத்தில் புதிய திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு மீண்டும் சமூகத்தில் சமாதான நீதவான்களின் அந்தஸ்த்தும் மதிப்பும் உயர்த்தப்பட வேண்டும் என மனித உரிமைகள் தொடர்பான சட்டத்தரணி எம்.அஸ்கர் அன்சார் தெரிவிக்கிறார்

| வருடம் | சமாதான நீதவான் நியமனங்கள் |
|---|---|
| 2013 | 9,064 |
| 2014 | 13,500 |
| 2015 | 7,311 |
| 2016 | 9,496 |
| 2017 | 14,020 |
| 2018 | 10,452 |
| 2019 | 6,225 |
| 2020 | 5,267 |
| 2021 | 6,106 |
| 2022 | 8,36 |

மூலம்- சமாதான நீதவான் பிரிவு, நீதி அமைச்சு





# ஊழியர் நலனை முதன்மைப்படுத்தும் MAS

இலங்கையின் மிகப்பெரிய ஆடை ஏற்றுமதியாளரும் தெற்காசியாவின் மிகப்பெரிய ஆடை தொழில்நுட்ப உற்பத்தியாளருமான MAS Holdings, ஊழியர் நலனுக்கான தனது அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தி ஆடைத் துறையில் பணியாற்றும் சமூகங்களுக்கு ஆதரவளிக்க மீண்டும் முன்வந்துள்ளது.

நிறுவனத்தின் சமீபத்திய ஊழியர் நலன் மற்றும் அனுகூலமான திட்டங்கள் அதிக பணவீக்கத்தை கூட்டாக எதிர்கொள்ளும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகின்றன.

உடனடி நடவடிக்கையாக, ஆயுளு குறிப்பாக அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவை எதிர்கொள்ள முடிந்ததுடன், அனைத்து ஊழியர்களுக்குமான மேலதிக கொடுப்பனவுகளை செலுத்துகிறது, இது மொத்தமாக 2022 இல் அவர்களின் மாதாந்த சம்பளத்தில் 125% ஆகும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் தொற்றுநோய்களின் போது அதன் ஊழியர்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்களைப் போக்க MAS பல முயற்சிகளை ஆரம்பித்தது.

MAS Holding இன் மனித வள செயற்பாடுகளுக்கான பணிப்பாளர் சரக குணவர்தன, MAS மக்கள் முதலாவதாக தொடர்பு கொள்வது என்னும் அணுகுமுறை மூலம் அதன் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியுள்ளது என்பதை சுட்டிக்காட்டினார்.






# டியுலக்ஸிற்கு சிறந்த விற்பனைக் காட்சி கூட விருது

Architect 2023 கண்காட்சியில் இலங்கையின் முன்னணி பெயின்ட் மற்றும் மேற்பூச்சு உற்பத்தியாளரான டியுலக்ஸ் பங்கேற்றிருந்ததுடன் புத்தாக்கமான வர்ணப் பயன்பாட்டுடனான சிறந்த விற்பனைக் காட்சி கூடம் எனும் விருதையும் சுவீகரித்திருந்தது.

இலங்கை கட்டடக்கலை நிபுணர்கள் SLIA நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த Architect 2023 வருடாந்த விற்பனைக் கண்காட்சி BMICH இல் இடம்பெற்றது.

முன்னணி நிறுவனங்கள் ,உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் பல்வேறு நிர்மாணங்கள் மற்றும் கட்டடக்கலைத் துறையில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்கள் இந்த கண்காட்சி நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.






# நாற்திசைக்கும் டயலொக்

நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் தொலைத்தொடர்பு இணைப்பை மேலும் விரிவுபடுத்தும் திட்டத்தின் மற்றுமொரு முயற்சியாக இலங்கையின் முதற்தர வலையமைப்பான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, அதன் "நாற்திசைக்கும் டயலொக் ("சிவ் தெசட்டம டயலொக்) செயற்றிட்டத்தின் கீழ் சமீபத்தில் குருநாகல் மாவட்டம் தீகிதவை பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரமொன்றை நிறுவி செயற்படுத்தியதன் மூலம் பின்தங்கிய கிராமிய பகுதிகளுக்கும் தொலைத் தொடர்பு வசதிகளை விரிவுபடுத்தியுள்ளது.

தீகிதவை பிரதேசத்திற்கு மேலதிகமாக தம்பகல்ல, வாகொல்ல, தெலஹெர, பிஹல்பொல, வடுவாவ, கெலேமுல்ல மற்றும் மாகடுவாவ ஆகிய குருநாகல் மாவட்டத்துள் அடங்கும் ஏனைய கிராமங்களிலும் அனைத்து இலங்கையர்களுக்கும் பரந்த தொலைத்தொடர்பு வசதிகளை வழங்கும் நோக்கத்திற்கு அமைவாகவே இப்பகுதிகளில் இவ்வாறு தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவற்றுடன் வவுனியா மாவட்டம் எத்தவெட்டுனுவெவ பகுதியிலும் மட்டக்களப்பு மாவட்டம் அறுகற்குடா மற்றும் புழுகனவாமலை ஆகிய கிராமிய பிரதேசங்களிலும் தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

வர்த்தக சுடர்



# கல்கிசை கடல் சுத்திகரிப்பு

இலங்கையில் பூச்சிகள் நிர்வகிப்புத் துறையில் முன்னோடியான Suren Cooke Agencies, Sri Lanka Sub-Aqua Club (SLSAC) மற்றும் Neptune's Army of Rubbish Cleaners (NARC)உடன் இணைந்து கல்கிசை கடல் பகுதியை அண்மையில் சுத்திகரித்தது.

வினைத்திறனான கடல் சுத்திகரிப்பு பணியை முன்னெடுப்பதை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திட்டம் அமைந்திருந்ததுடன் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி பொருளாதாரரீதியில் பின்தங்கிய நிலையைச் சேர்ந்த சமூகங்களுக்கு வலுவூட்டுவதை அடிப்படையாகக் கொண்டும் நிறுவனத்தின் நீண்ட கால சூழலுக்கு நட்பான நோக்கத்துக்கு பங்களிப்பு வழங்குவதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

கடற்படுகையில் காணப்படும் கழிவுகளை சேகரிக்கும் வேலையில் சுழியோடிகள் ஈடுபட்டனர்.பல்வேறு கப்பல் இடிபாடுகளில் சிக்கியிருந்த மீன்பிடி வலைகளும் மீட்கப்பட்டன.

# Pay&Go உடன் கைகோர்க்கும் HNB

HNB PLC, வங்கி MegaPay (Pvt) Ltd உடனான கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (SMEs) அணுகக்கூடிய மற்றும் மலிவு அட்டை கொடுப்பனவு ஏற்புத் தீர்வை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கையில் முன்னணி டிஜிட்டல் கொடுப்பனவு தீர்வு வழங்குனரான Pay&Go உடன் இணைந்துள்ளது.

இந்த கூட்டாண்மை மூலம், SME தொழில்முனைவோர், Pay&Go Android POS Terminals மூலம் நேரடியான கொடுப்பனவு இயந்திரங்கள் மற்றும் QR பரிவர்த்தனைகள் ஆகிய இரண்டையும் பயன்படுத்தி விரிவுபடுத்துவதற்கு முன்கூட்டியே POS அமைப்புடன் வசதியளிக்கப்படும்.



இந்த நிகழ்வின்போது HNB கார்ட் பிரிவின் பிரதானி கௌதமி நிரஞ்சன் மற்றும் MegaPay (Pvt) Ltd இன் பொதுப் பணிப்பாளர் வர்தன் அஸ்லிபெக்யான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# DFCC வங்கிக்கு விருது




இலங்கையின் மிகவும் பிரதிபலிப்பு மிக்க மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட வங்கிகளில் ஒன்றான DFCC வங்கி, தனது பணியாளர்கள் மத்தியில் புத்தாக்கம் மற்றும் விரைவியக்கம் ஆகியவற்றிற்கான மேம்பாட்டில் அதிகளவில் முதலீடு செய்துள்ளது.

DFCC வங்கியில் உள்ள புத்தாக்கம் மற்றும் விரைவியக்கம் சார்ந்த மாற்றம் ஆனது DFCC விரைவியக்க புத்தாக்க மையம் (Agile Innovation Centre) kற்றும் மனிதவள துறைகளால் ஒருங்கிணைக்கப்பட்டு வழிநடத்தப்படுவதுடன், இவை இரண்டும் வங்கியின் பணியாளர்களுக்கு உத்வேகம் அளிக்கின்றன.

இந்த முயற்சியானது, சவாலான நவீன வணிக சூழலை திறமையாக கையாளும் திறனை வங்கிக்கு அளிக்கின்ற அதே சமயம், பணியாளர்கள் தலைமையிலான மாற்றத்தை ஊக்குவிக்கிறது.




# TVET மாநாடு - விருதுகள் 2023

கல்வி அமைச்சின் திறன்கள் துறை அபிவிருத்தித் திட்டம் (Skills Sector Development Program - SSDP), வளமான மற்றும் நெகிழ்ச்சியான ஆசியா மற்றும் பசுபிக் இற்கான ஜப்பான் நிதியம் (Japan Fund for a Prosperous and Resilient Asia and the Pacific - JFPR) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (Asian Development Bank - ADB) ஆகியவற்றுடன் இணைந்து "இலங்கையில் வுஏநுவு துறையில் தனியார் துறை மற்றும் பெண்களை வலுவூட்டலுக்கான புத்தாக்கமான அணுகுமுறைகளை வெளிப்படுத்தல்" திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஒத்துழைத்து செயல்படுத்துகிறது.

தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (Technical and Vocational Education and Training - TVET) மற்றும் பாரம்பரியமற்ற மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் பங்கேற்பதை ஊக்குவிப்பதன் மூலம் தனியார் துறையை ஈடுபடுத்தி, பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

நாடு முழுவதும், 14 மாவட்டங்களில் உள்ள இளம் கிராமப்புற பெண் தொழில்முயற்சியாளரை அங்கீகரித்து, அவர்களுக்கு மதிப்பளிப்பதற்காக, 2023 ஆம் ஆண்டிற்கான TVET மாநாடு மற்றும் விருதுகள் நிகழ்வை Women in Management உடன் இணைந்து இந்த திட்டம் முன்னெடுத்தது.

# ஹேய்லிஸ் தேயிலை தோட்டத்திற்கு அமெரிக்க தூதுவர் விஜயம்



Hayley's பெருந்தோட்ட நிறுவனம், அண்மையில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் திருமதி ஜுலி செங்கை நுவரெலியாவில் உள்ள பேட்ரோ தேயிலைத் தோட்டத்திற்கு பிரத்தியேகமான சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்ளுமாறு அழைத்திருந்தது.


இந்த விஜயம் குறித்து தனது கீச்சக பக்கத்தில் (Twitter) கருத்து தெரிவித்த அமெரிக்க தூதுவர் செங்: "இலங்கையின் பொருளாதாரம் மற்றும் பிராந்தியத்தின் வெற்றிக்கு தேயிலை கைத்தொழில் முக்கிய பங்காற்றுகிறது.

பொருளாதார நெருக்கடியின் சவால்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பது பற்றிய எதிர்கால தொலைநோக்கு பார்வையை ஆராய்வதற்காக ஹேய்லிஸ் பெருந்தோட்டத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பிராந்திய முகாமையாளரை நான் சந்தித்தேன்."

அவரது வருகையின் போது, Haleys பெருந்தோட்ட நிர்வாகப் பணிப்பாளர், Dr. Roshan Rajadurai மற்றும் அவரது குழுவினர், Haleys பெருந்தோட்டத்ததில் எவ்வாறு ஒவ்வொரு அறுவடை இயந்திரத்தின் உற்பத்தியையும் துல்லியமாகப் பதிவுசெய்யும் தனிப்பயனாக்கப்பட்ட NFC அட்டைகளுடன் இணைக்கப்பட்ட மின்னணு எடைத் தராசுகளைப் பயன்படுத்துகிறது என்பதை விளக்கினர்.

ஹேய்லிஸ் பெருந்தோட்டம் தனது பணியாளர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை ஆதரிப்பதற்கும் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் முன்வைக்கப்படும் சவால்களை எதிர்கொள்வதற்கும் எடுத்த தொடர் முயற்சிகள் பற்றிய கலந்துரையாடல்களும் இந்த விஜயத்தில் அடங்கும்.

# புதிய அம்சங்களுடன் TikTok




TikTok, பல புதிய அம்சங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் Screen Time கருவியை அதிக பாவனையாளர் நட்பு விருப்பங்களுடன் புதுப்பித்துள்ளது மற்றும் இளைய பாவனையாளர் கணக்குகளுக்கு புதிய Default Settingsகளை அறிமுகப்படுத்தியுள்ளது. குழந்தைகளின் கணக்குகளில் பெற்றோருக்கு அதிகக் கட்டுப்பாட்டை வழங்கும் வகையில் இந்த அம்சம் விரிவுபடுத்தப்படுகிறது.

எதிர்வரும் வாரங்களில், 18 வயதுக்குட்பட்ட பாவனையாருக்குச் சொந்தமான ஒவ்வொரு கணக்கும் தினசரி 60 நிமிட Screen Time வரம்பிற்கு தானாகவே அமைக்கப்படும். பாஸ்டன் சில்ட்ரன்ஸ் ஹாஸ்பிடல் டிஜிட்டல் வெல்னஸ் ஆய்வகத்தின் நிபுணர்களுடன் கலந்தாலோசித்து, தற்போதைய கல்வி ஆராய்ச்சியின் பரிசீலனைக்குப் பிறகு இந்த வரம்பு தேர்ந்தெடுக்கப்பட்டது.

60 நிமிட வரம்பை அடைந்தால், இளம் பாவனையாளர்கள் தொடர்ந்து வீடியோக்களைப் பார்க்க PasscodeI உள்ளிடும்படி கேட்கப்படுவார்கள் மேலும் நேரத்தை நீட்டிக்க தெளிவான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டியிருக்கும்.

குடும்பங்களை மேம்படுத்துதல் மற்றும் பாவனையாளர் பாதுகாப்பை உறுதிசெய்வதன் ஒரு பகுதியாக, Tiktok இனால் Family Pairing இற்காக மூன்று புதிய அம்சங்களை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# Fcode Labs இற்கு இரட்டை விருதுகள்

இலங்கையின் முன்னணி மென்பொருள் மற்றும் டிஜிட்டல் சார்ந்த தீர்வுகளை வழங்கும் நிறுவனமான இரட்டை விருதுகளை வென்ற தனியார் நிறுவனத்தின் Flingo மற்றும் CarromBot உற்பத்திகளுக்கு, டிஜிட்டல் உற்பத்தித் துறை சார்ந்த வல்லுனர்களை



பாராட்டி கௌரவிக்கும் நோக்கத்துடன் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்தினால் நடாத்தப்படும் E-ஸ்வாபிமானி விருது விழாவில் இரட்டை விருதுகள் கிடைத்துள்ளன.

இந்த விழா அண்மையில் கொழும்பில் வெகு விமரிசையாக நடைபெற்றது. தனி ஒருவரால் கேரம் விளையாடக்கூடிய வகையில் செயற்கை அறிவின் அடிப்படையில் அமைந்த ரோபோவான CarromBot டிஜிட்டல் பொழுதுபோக்கு பிரிவின் வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டு மேற்படி விருதை வென்றுள்ளது.

கேரம் காயை பலகைப்பைக்குள் வீழ்த்துவதற்கு தேவையான சக்தி மற்றும் பார்வையை தனியே அடையாளங் காணக்கூடிய ஆற்றல் மேற்படிCarromBot இற்கு உண்டு.

மேற்படி விருது விழாவில் திறமைச் சான்றிதழ் விருதை வென்ற Flingo மொபைல் செயலி ஊடாக உங்களுக்கு சித்திரம் வரைவதற்கும் நண்பர்களுடன் உரையாடுவதற்குமான வாய்ப்பு கிடைக்கிறது. Flingo மொபைல் செயலியை பயன்படுத்துவோருக்கு ஸ்மார்ட் அனுபவங்களை பெறும் வகையில் நவீன தொழில்நுட்பத்தின் துணையுடன் அது தயாரிக்கப்பட்டுள்ளது.

Fcode Labs (www.fcodelabs.com) எனப்படுவது டிஜிட்டல் பரிணாம வளர்ச்சி (Digital Transformation), டிஜிட்டல் பொறியியல் உற்பத்தி (Digital Product Engineering), செயற்கை அறிவு (AI) மற்றும் Blockchain சேவைகளை வழங்கும் இலங்கை மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளை தளமாக கொண்டதொரு நிறுவனமாகும்.